# பல் முளைப்பு

# என்ன எதிர்பார்க்கலாம்?

## கை குழந்தைகளுக்கு வாய் ஆரோக்கியம்

## குழந்தையின் முதல் பற்கள் அவர்களின் முதல் பிறந்த நாள் முன் முளைக்க ஆரம்பிக்கும்.

### பல் முளைத்தல் ஒரு இயற்கையான சம்பவம்.

பிறப்பின்பொழுது உங்கள் குழந்தைக்கு 20 பற்கள் பல்லீறலுல் புதைந்துள்ளது. பல் முளைப்பென்பது இந்த பற்கல் ஆறில் இருந்து பத்து மாதத்திற்குள்ளும், மீதம் அடுத்த 2 முதல் 3 வருடங்கற்குல்லும் தோன்றுவது. இது ஒரு வழிகாட்டியே: ஏனெனில் ஒவ்வொரு குழந்தையும் வெவ்வேறு மாதிரி இருக்கலாம்.

இந்த பற்களை ஆரோக்கியமாக வைத்திருப்பது மிகவும் முக்கியம், ஏனெனில் இவை பின் வரும் வயதுவந்த பற்களுக்கு இடம் காப்பவை. குழந்தை கடைவாய்ப்பற்களின் பின் தோன்றும் வயது வந்த கடைவாய்ப்பற்களில் தொடங்கி, குழந்தைப் பற்களின் இயற்கையான இழப்பும் வயது வந்த பற்களின் தோற்றமும், ஆறிலிருந்து பண்ணிறண்டு வயதுக்குள் இடம் பெறும்.

### பல் முளைப்புக்கான பொது அறிகுறிகள் உண்டு

பல் முளைப்பு குழந்தைக்கு சிறிய அசௌகரியம் ஊட்டலாம். நீங்கள் கீழ் உள்ள அறிகுறிகளை பல்லீறலில் இருந்து பல் தோன்றுகின்ற போது காணலாம். வருத்தப்படத் தேவையில்லை. இது ஒரு பல் முளைப்புக் கட்டம். உங்கள் குழந்தை :

- ஜொள்ளு விடலாம்
- மேலும் வரிச்சலுடன் இருக்கலாம்
- சிவந்த கண்ணங்கள், சிவந்த வீங்கிய பல்லீறல் இருக்கலாம்
- எதையும் மெல்லும் ஆர்வம் காண்பிக்கலாம்.

### பல் முளைப்பை மற்ற வியாதியோ என்று குழப்பம் செய்யாதீர்.

சுரம், மூக்கொழுதல் அல்லது பேதியை பல் முளைப்புக்கான அறிகுறி என்று நம்பாதீர்கள். இப்படி தவறாக நினைத்து, உண்மையான காது, சிறுநீர் குழாய், மெனீன்ஜைடிஸ் அல்லது மற்ற கிருமியோ விக்ஷீர் நோயையோ கண்டுப்பிடுத்து ஆற்ற மிக்க தாமதம் ஆகிவிடலாம்.



# நீங்கள் உங்கள் குழந்தைக்கு பல் முளைக்கும் சமயத்தில் உதவலாம்.

கீழ்கண்ட படிகளை கடைப்பிடித்தால், உங்கள் குழந்தை பல் முளைப்பு பருவத்தை பத்திர–மாக தாண்ட நீங்கள் உதவலாம்:

- உங்கள் கைவிரலால் வீங்கிய பல்லீறலை நேரடியாக சில நிமிடங்கள் தேய்க்கலாம். சுத்தமான குலிர் பெட்டியில் வைத்தெடுத்த ஈரத்துணியாலும் தேய்க்கலாம்.
- குழந்தைகள் தங்கள் பல்லீறலை தாமே கடினமான சாதனங்களைக் கடித்து தேய்த்துக்கொள்ளுவார்கள். அவர்களுக்கு பல் முளைப்பு வளையம் அல்லது குளிர்ந்த ஈரத்துணியைக் கொடுங்கள்.
- குளிர்ந்த வாழைப்பழத்துண்டு கொடுக்கலாம். கடினமான கேரட் வகை உணவுகள் தொண்டையை அடைக்கலாம். அதனால் அவற்றை தவிர்க்கவும்.
- இந்தக்குறிப்புகள் உதவி செய்யவில்லையெனில், குழந்தை விழுங்கு அலவு அசிடாமினா∴பன் ஒரு நாளைக்கு கொடுக்கலாம். கடையில் வாங்கப்பெறும் பல் முளைப்பு ஜெல்கள் வைத்தியர் ஆலோசனையின்றி கொடுக்கக்கூடாது.








மேலும் தகவலுக்கு அணுகவும்:
இன்∴போ லைன் 1-800-268-1154
ரொரன்ரோவிலிருந்து 416-314-5518
காது கேலாதவர்களுக்கு 1-800-387-5559
இன்டெர்நெட் www.gov.on.ca/health

**For information in English, contact:**
**1-800-268-1154 – Toronto 416-314-5518**
**TTY 1-800-387-5559**
**www.gov.on.ca/health**

**Based on materials developed by the City of Ottawa, People Services Department**

7610-6134358 TAMIL 40M March 2002
© 2002 Queen's Printer for Ontario

ஆரோக்கிய கவனிப்பு உங்களுக்கு அளிக்க

Ontario
Early Years